# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 10.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 169/SCIC/2023**

திரு.வெள்ளைச்சாமி
சி-2, 3ம் தளம், 3-எ குறுக்குத் தெரு — மேல்முறையீட்டாளர்
சத்குரு அனுகிரகா குடியிருப்பு
சண்முக நகர் மேற்கு
திருச்சி - 620 102.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் “அ” பிரிவு ....... பொதுஅதிகார அமைப்பு
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை - 600 028.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 07.10.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 04.11.2022 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 16.11.2022 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 03.01.2023 |
| 5. | ஆணையத்தின் அறிவிப்பு | 27.03.2023 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.01.2025 |
| 7 | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 04.03.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / “அ” பிரிவு கண்காணிப்பாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பார்வை-1. என்னுடைய மனு நாள் 29/08/2022 உள்ளிட்ட 3 - தொடர்பாக - பதிவுத்துறைத் தலைவர் கோப்பு எண்.26241/அ1/2005 மேல் நடவடிக்கை எடுக்கப்பட்ட நாள் 26/07/2022 என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேல் நடவடிக்கை எடுக்கப்பட்ட கடித நகல் வழங்கக் கேட்டுக் கொள்கிறேன். மேல்விவரம் அரசிடமிருந்து கோரப்பட்டு, அதன் விவரம் கள்ளக்குறிச்சி மாவட்டப் பதிவாளரிடம் கோரப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசிடமிருந்து மேல் விவரம் கோரப்பட்டுள்ள கடித நகல் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டப் பதிவாளரிடம் பதிவுத் துறை தலைவரால் கோரப்பட்டுள்ள கடித நகல்கள் வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்” எனக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (10/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எவ்வித கடிதமும் மனுதாரரிடமிருந்து பெறப்படவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள் 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அன்னாரது வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் செல்வி.ரா.பானுமதி, “அ” பிரிவு கண்காணிப்பாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை அவர்கள் ஆஜரானார். மனுதாரர் 04/03/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பிய ஆட்சேபணை மனுவில், தனது 16/11/2022 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு, 17/04/2023 தேதியிட்டு மேல்முறையீட்டு அலுவலர் 5 மாதங்களைக் கடந்த பின்னர் தகவல் அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். எனவே, 16/11/2022 தேதியிட்ட மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு உரிய கால வரம்பிற்குள் தகவல் அளிக்காத அப்போதைய (16/11/2022 தேதிய) மேல்முறையீட்டு அலுவலர் திருமதி B.ஜெயலட்சுமி (தற்போது) மாவட்டப் பதிவாளர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை அவர்கள் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**3. இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 17/04/2023 தேதியிட்டு ஆவணங்களின்படியான சரியான தகவல் மற்றும் நகல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இத்துடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 169/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1. பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் “அ” பிரிவு
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை - 600 028.

2.திருமதி.B.ஜெயலட்சுமி,
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்
(தற்போது) மாவட்டப் பதிவாளர்,
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-28

**மேல்முறையீட்டாளர்**

திரு.வெள்ளைச்சாமி
சி-2, 3ம் தளம், 3-எ குறுக்குத் தெரு
சத்குரு அனுகிரகா குடியிருப்பு
சண்முக நகர் மேற்கு
திருச்சி - 620 102.

நகல்.

1.பதிவுத்துறைத் தலைவர்.
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-28

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)

RG/PC